# ஓஷன் ஸ்டார்ஸ் லங்கா

# Ocean Stars Lanka

ஆரம்பம் : தை 2005 செய்தி மடல் : 31 மார்கழி 2022 3ம் வெளியீடு


https://www.oceanstarslanka.lk

lankaoceanstars@gmail.com

OCEAN STARS LANKA

NO. 233, BAR ROAD, BATTICALO




வணக்கம்

ආයුබෝවන්

WELCOME


Registered @ NGO Secretariat, Colombo.

Registration No – FL 170804


## ஒஷன் ஸ்டார்ஸ் லங்கா பற்றிய அறிமுகம்.

ஒஷன் ஸ்டார்ஸ் லங்கா 2004 இல் பேரழிவை ஏற்படுத்திய சுனாமியை தொடர்ந்து 2005இல் நிறுவப்பட்டது. இலங்கையில் பிறந்து தற்போது இங்கிலாந்தில் வசிக்கும் முன்னாள் முன்பள்ளி ஆசிரியையான திருமதி. டிலானி பன்டரால் இது நிறுவப்பட்டது. ஒஷன் ஸ்டார்ஸ் லங்கா சுனாமி மற்றும் இலங்கை உள்நாட்டுப் போரினால் அழிவடைந்த சமூகங்களை கட்டியெழுப்புவதற்கு உருவானது. ஒஷன் ஸ்டார்ஸ் லங்கா இலங்கையில் பதிவு செய்யப்பட்ட ஒரு அரச சார்பற்ற நிறுவனமாகும். பாதிக்கப்பட்ட பகுதிகளில் கல்வி மற்றும் சமூக திட்டங்களை செயற்படுத்தும் தொண்டு நிறுவனமாக இது விளங்குகிறது. ஒஷன் ஸ்டார்ஸ் லங்கா அதன் சகோதர அமைப்பான ஒஷன் ஸ்டார்ஸ் டிரஸ்ட் UK (OCEAN STARS TRUST – UK) மூலம் நிதியளிக்கபடுகிறது. ஒஷன் ஸ்டார்ஸ் லங்காவின் திட்டங்கள் முதன்மையாக இலங்கையின் கிழக்கு மாகாணத்தை அடிப்படையாகக் கொண்டவை ஆனால் வடக்கு மற்றும் மேல் மாகாணங்களிலும் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. தற்போது ஒஷன் ஸ்டார்ஸ் லங்காவானது 29 முன்பள்ளிகளுக்கு ஆதரவளிப்பதுடன் சமூக வலுவூட்டல் திட்டங்கள் மற்றும் 150 வறிய மாணவர்களுக்கு கல்வி செயற்பாட்டிற்காக நிதி அனுசரணையும் வழங்கிவருகிறது







## முன்பள்ளி மாணவர்கள் ஆசிரியர்களுக்கு சீருடை புத்தகப்பைகள் வழங்குதல்.

2022 தைமாதம் ஓஷன் ஸ்டார் லங்கா நிறுவனத்தின் கீழ் உள்ள 29 பாலர் பாடசாலை மாணவர்கள் ஆசிரியர்களுக்கு சீருடை மற்றும் புத்தகப்பைகள் என்பன வழங்கப்பட்டன.







## துவிச்சக்கரவண்டி வழங்கல

அம்பிலாந்துறை பாலர் பாடசாலையில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

## சிறுவர் சந்தை

மட்டக்களப்பு மாவட்டத்தில் இயங்கி வருகின்ற பாலர் பாடசாலைகளினால் சிறுவர் சந்தை நடாத்தப்பட்டது.






## வருடாந்த முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சிப்பட்டறை (ஜீலை 2022)

முன்பள்ளி பணியகத்தின் உதவியுடன் இவ்வாண்டு 2022 ஜீலை ஓஷன் ஸ்டார் லங்கா நிறுவனத்தினால் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சிப்பட்டறை மட்டக்களப்பில் உள்ள மியானியில் நடைபெற்றது. இப்பயிற்சி நெறிகள் 03 நாட்கள் இடம்பெற்றன. இதில் 95 முன்பள்ளி ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.





## October Visit

**ஓஷன் ஸ்டார்ஸ் லங்காவின் இணைப்பு பாடசாலைகளில் ஒன்றான கல்லடி வேலூர் சக்தி வித்தியாலயத்திற்கு சம்பா இசைக்கருவிகள் வழங்கிவைக்கப்பட்டன.**

**October மாதம் கல்தோப்பா பாடசாலையிலிருந்து வருகைதந்து (CPS Team) இணைப்பு பாடசாலைகளுக்கு விஜயம் செய்தனர்.**











## October Visit

கடந்த 3 வருடங்களிற்கு பின் டிலானி அம்மணி அவர்கள் மட்டக்களப்பிற்கு விஜயம் செய்தது மிகவும் மகிழ்ச்சியான சம்பவமாகும். மேலும் 08 பாலர்பாடசாலைக்கும், நம்பிக்கை இல்லத்திற்கும் டிலானி அம்மணி அவர்களும் எமது ஓஷன் ஸ்டார் லங்கா உத்தியோகத்தர்களும் விஜயம் செய்தோம்.













## முதலாம் தரத்திற்கு செல்லும் மாணவர்களுக்கான பட்டமளிப்பு விழா நடத்தப்பட்டது.

321 மாணவர்களுக்கான பாலர்பாடசாலையிலிருந்து முதலாம் தரத்திற்கு செல்லவிருக்கும் மாணவர்களுக்கான பட்டமளிப்பு விழா நடாத்தப்பட்டது.







## காலை உணவு வழங்கல்

எமது நிறுவனத்தின் கீழ் இயங்கும் 15 பாலர் பாடசாலைகளுக்கு காலை உணவு வழங்கப்பட்டுவருகின்றன. இதனால் அனைத்து மாணவர்களுக்குமான போசாக்கான உணவு அவர்களுக்கு கிடைக்கின்றன. இதனால் ஆரோக்கியமாகவும் சுறுசுறுப்பாகவும் அவர்களது கல்வி செயற்பாடுகளை மேற்கொள்கின்றனர்.








## பாடசாலைகளுக்கு தளபாடங்கள் வழங்கல்

வாகரை இளம்பிறை பாலர் பாடசாலை பட்டிப்பளை Little Star பாலர் பாடசாலைகளுக்கு அலுமாரி வழங்கிவைக்கப்பட்டது.



## பாடசாலை உபகரணங்கள் வழங்கல்

அனைத்து பாலர் பாடசாலைகளுக்கும் கற்றல் கற்பித்தல் உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டன.





## நம்பிக்கை இல்லம் திறப்பு

போரதீவு பற்று பிரதேச செயலக அனுமதியுடன் ocean stars lanka வின் அனுசரனையுடன் மண்டூர் பாலமுனை பிரதேசத்தில் புதிதாக நம்பிக்கை இல்லம் ஒன்று திறந்துவைக்கப்பட்டது. இதன் மூலம் பெண்கள் தமது வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கான பயிற்சி நெறிகளை நடைபெற்றவருகின்றன.





## STRATEGY PLAN

எமது ocean stars lanka நிறுவனத்திற்கான பணிக்கூற்று, இலக்கு மற்றும் என்பன இவ்வருடத்தில் புதிதாக உருவாக்கப்பட்டது.



## ஓஷன் ஸ்டார்ஸ் லங்காவின் பெறுமை.

எமது மாதாந்த புலமைபரிசில் மாணவர்களுள் ஒருவரான ஜெ. கர்ஜிதன் வயதிலிருந்து எம்மிடம் கல்வி அனுசரனை பெற்று தற்போது அவரது சாதாரண தரப்பரீட்சை பெறுபேற்றில் 9A சித்திகளைப் பெற்றுள்ளார். அவருக்கு எமது நிறுவனத்தின் சார்பில் வாழ்த்துகளை தெரிவிப்பதில் பெருமிதம் அடைகிறோம்.

மாதாந்த புலமை பரிசில் பணத்தின் ஆதரவைப் பெறுவதன் மூலம் எங்கள் மாணவர்கள் கூடுதல் வகுப்புகளை அணுகுவதன் மூலமும் கற்றல் வளங்களில் முதலீடு செய்வதன் மூலமும் தங்கள் படிப்பை மேம்படுத்த முடியும். புலமைப்பரிசில் ஒரு குழந்தையின் வாழ்க்கையை உண்மையிலேயே மாற்றுகிறது மற்றும் அவர்களின் வாழ்க்கை வாய்ப்புகளை மையப்படுத்துவதற்கும் அவர்களுக்கும் எதிர்கால சந்ததியினருக்கும் ஒரு புதிய பாதையை உருவாக்குவதற்கும் கருவிகளை வழங்குகிறது.



தரம் 1ல் இருந்து எங்களின் ஸ்பான்சர் பிள்ளைகளில் ஒருவரான படிப்பில் சிறந்து விளங்கி தற்போது இந்த ஆண்டு முகாமைத்துவ பீடம் கற்கை நெறியினை பெற்றுள்ளார். Ocean Stars Lanka இது மிகவும் பெருமையான தருணமாக இருந்தது. நமது சொந்தக் கனவுகளில் ஒருவரைப் பார்த்து அவர்களின் சமூகம் பெருமைப்படுவதைப் பார்க்கிறது.




## SPONSOR CHILDREN 2022



## சிறுவர் பூங்கா செயற்றிட்டம்

மகாதேவன் குடும்பத்தினரின் நிதிப்பங்களிப்புடன் தனது பாட்டியின் நினைவாக ocean stars lanka மற்றும் ocean star trust ஊடாக மட்டக்களப்பு கருவப்பங்கேணி பிரதேசத்தில் சிறுவர்களுக்கான மகாதேவன் சிறுவர் விளையாட்டு பூங்கா ஒன்று நிர்மாணிக்கப்பட்டு கடந்த 2022 ஜீலை மாதம் 23ம் திகதி மிகவும் கோலாகலமாக திறந்துவைக்கப்பட்டது.



## Ocens stars lanka தனது சிறந்த சேவைக்கான விருதினை பெற்றது








# ஓஷன் ஸ்டார்ஸ் லங்கா.

# (Ocean Stars Lanka)

மக்களின் வாழ்வாதாரத்தினை உயர்த்துவதற்காக பிரதேச செயலகத்தினால் தெரிவு செய்யப்பட்ட மீனவர்களுக்கு தேணிகள் மற்றும் மீன் பிடி வலைகள் என்பன ஓஷன் ஸ்டார்ஸ் லங்காவினால் வழங்கப்பட்டன.





**Ocean stars lanka sponsor children க்கான வாழ்வாதார மற்றும் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.**






# OCEAN STARS LANKA TEAM



From left to right: Salujah: Sponsor Manager,  Disha: Preschool Manager, Chithra: Office Manager, Shalini: Assistant Director

**Founder and Trustees of Ocean Stars Trust UK**



From left to right: Dan: Trustee, Dilanee: Founder, Jo: Trustee, Jennie: Trustee, John: Chair and Finance Manager and Cameron: Trustee.